# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | I.A.92/1996 in O.S.No.81/1996 | **CNR No.** | : | TNKI13-000001-1972 |
| **Name** | : | ராம கவுண்டர் | **Father's Name** | : | மாரப்ப கவுண்டர் |
| **Witness for** | : | மனுதாரர் | **Calling** | : | PW1 |
| **Age** | : | 70 | **Village** | : | ராமகவுண்டனூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 03.00 PM | **End Time** | : | 03.20 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 27.02.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியாக முன்னிலையாகி நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்கிறேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண பிரமாணப்பத்திரத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவை சரியாக இருந்ததால் நான் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்தேன். (கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது).

| S.No. | Date | Document | Remarks | Exhibit |
|---|---|---|---|---|
| 1. | 03.03.1987 | உயில் சாசன பத்திரம் | அசல் | P1 |
| 2. | 27.02.2022 | சாந்தாம்மாள் என்பவருடைய இறப்பு சான்றிதழ் | சான்றொப்பமிட்ட நகல் | P2 |

**4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) நான் தாக்கல் செய்துள்ள உயில் யார் எழுதினார்கள் என்றால் எனது அம்மா சொல்ல சொல்ல பாய் ஒருவர் எழுதினார். எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 03.03.1987–ல் எழுதப்பட்டது. யார் கொடுத்தார்கள் என்றால் எனது அம்மா எழுதிக் கொடுத்தார். எனது அம்மா உயிருடன் இருக்கிறாறா என்றால் 01.06.1987 தேதியில் இறந்துவிட்டார். உயிலில் எனது அம்மா கையொப்பம் செய்தாரா கைரேகை வைத்தாரா என்றால் கைரோகை வைத்தார். உயில் எழுதும் போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் நாகராஜ், ராமசந்திரன், எனது மச்சான் மேகநாதன், எனது தங்கை ராமக்காள், கதிர்வேல், சிவலிங்கம் உடனிருந்தார்கள். உயிலில் சாட்சியாக யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் எனது அம்மா கைரேகை செய்த பிறகு நாகராஜ், ராமசந்திரன், மேகநாதன், எனது தங்கை ராமக்காள் ஆகியோர்கள் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள், அதன் பிறகு ஆவண எழுத்தர் கையொப்பம் செய்தார். சாட்சியாக கையொப்பம் செய்தவர்கள் யார் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் நாகராஜ், ராமசந்திரன் இருக்கிறார்கள். மேகநாதன், ராமக்காள் மற்றும் உடனிருந்த கதிர்வேல் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

(2) 10 முதல் 12 எதிரிமனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-

District Munsif
Uthangarai